ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1372/23 - 2004 දෙසැම්බර් 24 වැනි සිකුරාදා - 2004.12.24

*1372/23 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவை பிரமாணக்குறிப்பு

*1969 பெப்ரவரி மாதம் 21 ஆந் திகதிய 14842 ஆம் இலக்க, இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 1969 பெப்ரவரி மாதம் 21 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட அரசாங்க சிறாப்பர்கள் சேவைப் பிரமாணக்குறிப்பு, 1971 செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதிய, 14977/9 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, 1971 ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட பொது எழுதுநர் சேவை பிரமாணக்குறிப்பு, 1972 மே 19 ஆந் திகதிய 15011 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 1972 மே 19 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட அரசாங்க சுருக்கெழுத்தாளர்கள் சேவை பிரமாணக்குறிப்பு, 1972 மே 20 ஆந் திகதிய 15011/2 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிப்பட்டு 1972 மே மாதம் 20 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட அரசாங்க தட்டெழுத்தாளர் சேவை பிரமாணக்குறிப்பு, 1979 நவெம்பர் 30 ஆந் திகதிய 65 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 1975 ஏப்பிரல் மாதம் 01 ஆந் திகதி முதல் செயல் வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட அரசாங்க கணக்குப் பதியுநர் சேவை பிரமாணக்குறிப்பு, 1984 யூன் 11 ஆந் திகதிய 301/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 1984 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெற்ற இடையிடையே திருத்தப்பட்ட பண்டசாலை காப்பாளர் பிரமாணக்குறிப்புக்குப் பதிலாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிப்பின்படி பின்வரும் அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு வெளியிடப்படுகிறது.*

ஜயம்பதி பீ. ஹெட்டிஆரச்சி,
இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
2004, டிசெம்பர் 15.

### அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவை பிரமாணக்குறிப்பு

**பிரமாணக்குறிப்பின் தலைப்பு.**- இப்பிரணமாணக்குறிப்பானது அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவை பிரமாணக்குறிப்பு என அறியப்படும்.

1.1 தற்போது இணைந்த சேவைகளைச் சேர்ந்த பொது எழுதுநர் சேவை, அரசாங்க தட்டெழுத்தாளர் சேவை, அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவை, அரசாங்க கணக்குப் பதியுநர் சேவை, அரசாங்க சிறாப்பர் சேவை, அரசாங்க பண்டசாலை காப்பாளர் சேவை ஆகியனவற்றுக்குப் பதிலாக இனிமேல் அரசாங்க முகாமை உதவியாளர் சேவை செயல்வலுப்பெறும்.

1.2 கீழ்க்காணும் சேவை, பிரமாணக்குறிப்பு, அத்தகைய பிரமாணக்குறிப்புகளில் காலத்துக்குக் காலம் செய்யப்படும் திருத்தங்கள் ஆகியவற்றின்படி எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இப்பிரமாணக் குறிப்பு செயல்வலுப்பெறும்-

(அ) 1969 பெப்ரவரி 21 ஆந் திகதிய 14842 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமாயியில் வெளியிடப்பட்ட 1969 பெப்ரவரி 21 ஆந் திகதி முதல் செயல் வலுப்பெறும் அரசாங்க சிறாப்பர்கள் சேவை பிரமாணக்குறிப்பு.

(ஆ) 1971 செத்தெம்பர் 29 ஆந் திகதிய 14977/9 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1971 ஒற்றோபர் 01 முதல் செயல் வலுப்பெறும் பொது எழுதுநர் சேவை பிரமாணக்குறிப்பு.

(இ) 1972 மே 19 ஆந் திகதிய 15011 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 மே 19 முதல் செயல் வலுப்பெறும் அரசாங்க சுருக்கெழுத்தாளர்கள் சேவை பிரமாணக்குறிப்பு.

(ஈ) 1972 மே 20 ஆந் திகதிய 15011/2 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 மே 20 ஆந் திகதி முதல் செயல் வலுப்பெறும் அரசாங்க தட்டெழுத்தாளர் சேவை பிரமாணக்குறிப்பு.

(உ) 1979 நவெம்பர் 30 ஆந் திகதிய 65 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1975 ஏப்பிரல் 01 ஆந் திகதி முதல் செயல் வலுப்பெறும் அரசாங்க கணக்குப் பதியுநர் சேவை பிரமாணக்குறிப்பு.

(ஊ) 1984 யூன் 11 ஆந் திகதிய 301/ 2 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமாயில் வெளியிடப்பட்ட 1984 பெப்ரவரி 1 முதல் செயல்வலுப்பெறும் அரசாங்க பண்டககாப்பாளர் சேவை பிரமாணக்குறிப்பு.

1.3 பிரமாணக்குறிப்பு 2004.01.01 முதல் செயல் வலுப்பெறும்.

2. **வரைவிலக்கணம் :**

2.1 "பிரமாணக்குறிப்பு" எனும் பதம் அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவை மீதான பிரமாணக்குறிப்பு எனப்பொருள்படும்.

2.2 "செயலாளர்" என்பது பொது நிருவாக விடயத்துக்குப் பொறுப்பான செயலாளர் எனப் பொருள்படும்.

2.3 "பணிப்பாளர் அதிபதி" என்பது இணைந்த சேவைகள் பணிப்பாளர் அதிபதி என பொருள்படும்.

2.4 "சேவை" என்பது அரசாங்க முகாமை உதவியாளர் சேவை எனப்பொருள்படும்.

2.5 "ஆணைக்குழு" என்பது அரச சேவை ஆணைக்குழு எனப்பொருள்படும்.

2.6 "திருப்திகரமான சேவைக்காலம்" என்பது அனைத்து வேதன ஏற்றங்களையும் சம்பாதித்து அத்துடன் ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை, கடுமையான எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிராத, பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கும் திகதிக்கு முந்திய அக்காலப்பகுதி எனப் பொருள்படும்.

2.7 "தீவிர சேவைக்காலப்பகுதி" என்பது பொது தேவைகள் அல்லது அரசாங்க கொள்கைகளின் தேவைப்பொருட்டு தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளில் அலுவலர் ஒருவர் தீவிரமாக ஈடுபட்டு அப்பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று வந்த அக்காலப்பகுதி எனப்பொருள்படும்.

2.8 "கசெற்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் வெளியிடப்படும் வர்த்தமானிப் பத்திரகையாலும்

3. **கட்டமைப்பு.**- இச்சேவை வகுப்பு III க்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களையும் பதவி உயர்வு மூலம் வகுப்பு II, I, அதியுயர் வகுப்புகளுக்கு கீழ்க்காணும் சம்பள அளவுத் திட்டத்தில் நியமிக்கப்பட்ட அலுவலர்களையும் குறிக்கும்.

4. **திரட்டிய ஆண்டு சம்பள அளவுத்திட்டம்.**-அன்றைய திகதியில் இருந்தவாறான சம்பள அளவுத் திட்டத்தின் நிகரொத்த 2004.01.01 முதல் செயல் வலுப்பெறும் புதிய சம்பள அளவுத்திட்டம்-

*அதி உயர் வகுப்பு :*

ரிஏ 3.8.2 - ரூபா 1,05,120-16X2,460- ரூபா 1,44,480
வகுப்பு I - ரூபா 87,300- 6X1, 560-13X2.460 - ரூபா 125, 640.
ரிஏ 3.6.1
வகுப்பு II - ரூபா 78,720- 3X1,320-15X1,560- ரூபா 1,06,080
வகுப்பு III - ரூபா 69,480- 15X1,320- 4X1,560-ரூபா 95. 520

5. **வினைத்திறன் தடை :**

5. 1 வகுப்பு III இலுள்ள அலுவலர்கள் அப்பதவியில் நியமனம் பெற்ற திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் வினைத்திறன் தடைப்பரீட்சை ஒன்றில் சித்தியடைய வேண்டும். பணிப்பாளர் அதிபதியின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியினால் நடத்தப்படும் கணனிப் பிரயோக செயல்முறைப் பரீட்சையிலும் (பின்னிணைப்பு IV) வினைத்திறன் தடைப்பரீட்சையிலும் பின்னிணைப்பு XI) சித்தியடைந்த பின்னர் அலுவலர் வினைத்திறன் தடைப்பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படுவர்–

5.1.1 கணனி வசதிகளை உடனடியாக வழங்க முடியாது உள்ளவிடத்து வரிசை அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டபடி அலுவலர் தட்டெழுத்துப் பரீட்சை ஒன்றில் சித்தியடைய வேண்டும் (பின்னிணைப்பு IV) எவ்வாறாயினும் இவ்வேற்பாடுகள் பிரமாணக்குறிப்பு செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

5.1.2 தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கணனி இயக்குநர் உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுள்ள அலுவலர்களும் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி இயக்குநர் உத்தரவுப்பத்திரத்துக்கு சமமான அல்லது அதைவிட உயர்வான கணனி அடிப்படையிலான பிரயோக, கோட்பாடு சார் கணனி சான்றிதழ்களைக் கொண்டவர்களும் இப்பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறுவர். வினைத்திறன் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பங்களைக்கோரும் வர்த்தமானி அறிவித்தலில் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளினதும் அப்பாடநெறிகளை நடாத்தும் நிறுவனங்களினதும் நிரல் வெளியிடப்படும்.

5.2 II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்று 06 வருடங்கள் முடிவடைவதற்கு முன் பணிப்பாளர் அதிபதியின் சார்பில் பரீட்சை ஆணையாளர் அதிபதியினால் நடாத்தப்படும் வினைத்திறன் தடைப்பரீட்சை ஒன்றில் சித்தியடைய வேண்டும். (பின்னிணைப்பு XII) அத்துடன் 5.2.1 இல் விதிக்கப்பட்டவாறு இரண்டாம் மொழித் தேவையை திருப்தி செய்திருக்க வேண்டும்.

5.2.1 இரண்டாம் மொழிப்பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறுவதற்கு கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) பரீட்சையில் விருப்பத்துக்குரிய பாடமாக சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கென நாடளாவிய மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் பெற்றிருந்தால் போதுமானது.

6. **பதவியணி**.- பதவியணி ஆண்டு மதிப்பீடுகளில் அந்தந்த தலைப்புகள், நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் குறிப்பிட்டவாறு அமையும்.

7. **கட்டுப்பாடு**.- பொது ஏற்பாடுகளுக்கு உட்பட்டு சேவையானது ஆணைக்குழு/செயலாளர்/பணிப்பாளர் அதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

8. **வகுப்பு IIIக்கு ஆட்சேர்ப்பு :**

8.1 ***திறந்த போட்டிப் பரீட்சை:***

8.1.1 சேவையின் III ஆம் வகுப்பில் உள்ள பதவி வெற்றிடங்களில் எழுபது சதவீதம் (70%) பணிப்பாளர் அதிபதியின் சார்பில் பரீட்சை ஆணையாளர் அதிபதியினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அத்துடன் தகைமைகளைச் செவ்வை பார்க்கும் நேர்முகப்பரீட்சை மூலம் செய்யப்படும்.

8.1.2 *தகவுத்திறன்:*

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாலும் இருத்தல் வேண்டும்.
(இ) நற்குணமுடையவராயிருத்தல் வேண்டும்.
(ஈ) கீழ்க்காணும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில்.-

(i) சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி
(ii) கணிதம்
(iii) அத்துடன் வேறு இருபாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன்

(2) கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் (பொது சாதாரண பத்திரk; தவிர்ந்த) அனைத்து பாடங்களிலும் சித்தி அல்லது ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி போதுமானது.

8.1.3 *விண்ணப்பிக்கும் முறை.-* விண்ணப்பிக்கும் முறையும் பரீட்சை விபரங்களும் வர்த்தமானியில் வெளியிடப்படும் (பின்னிணைப்பு II)

8.2 ***மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை:***

8.2.1 வகுப்பு III இல் 30% க்கு (முப்பது வீதம்) மேற்படாத பதவி வெற்றிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் போட்டிப்பரீட்சை அத்துடன் செவ்வை பார்த்தல் பொருட்டான நேர்முகப்பரீட்சை மூலம் அரசாங்க சேவையிலுள்ள சிறு பணியாளர்களைப் பதவி உயர்த்துவதன் மூலம் நிரப்பப்படும்.

8.2.2 பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனத்துக்கான தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை 30%க்கு குறைவாக இருப்பின், 30%க்கும் நியமனத்துக்கு தகுதியுடையோருக்குமிடையே காணப்படும் வித்தியாசம் திறந்த போட்டிப்பரீட்சையில் தகைமை பெறும் நபர்களிலிருந்து நிரப்பப்படும்.

8.2.3 தகவுத்திறன் : பின்னிணைப்பு III இல் குறித்துரைத்தவாறு அரச சேவையிலுள்ள சிறு பணியாளர்கள் விண்ணப்பிக்கும் தகுதி உடையவர்களாவார்கள்.

8.2.4 *விண்ணப்பிக்கும் முறை.-* மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறையும் பாடத்திட்டமும் வர்த்தமானியில் வெளியிடப்படும். (பின்னிணைப்பு III).

9. **பதவியில் உறுதிப்படுத்துதல் :**

9.1 சேவையின் III ஆம் வகுப்பிற்கு நியமனம் பெறும் அலுவலர் ஒருவர் 3 வருட தகுதி காண் காலப்பகுதிக்கு உட்படுவர், தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் 1 ஆம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற்று அத்துடன் 5.1 இல். விதிக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ததன்மேல், அவரது வேலை, நடத்தை, வருகை ஆகியவை திருப்திகரமாக உள்ளன எனத் திருப்தியுற்று திணைக்களத் தலைவர் பணிப்பாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்து சமர்ப்பிக்கும் அறிக்கையை பணிப்பாளர் நாயகம் ஏற்றுக்கொண்டால் அவர் அவரது பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்.

***குறிப்பு.-*** தகுதிகாண் காலப்பகுதி தொடர்பில் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன.

9.2 அனைத்து நியமனங்களின் உறுதிப்படுத்தல்களும் அலுவலர் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குரிய உடற்தகைமையுடையவர் என்று சான்றுபடுத்தும் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படும்.

**10. பயிற்சி :**

சேவையில் நியமிக்கப்படும் ஒவ்வொரு அலுவலருக்கும் மூன்று (3) மாதங்களுக்கு குறையாத ஆரம்ப பயிற்சி அளிக்கப்படும்.

11. **வகுப்பு II க்கு பதவி உயர்வு :**

11.1 (அ) சேவையின் வகுப்பு III இலுள்ள அலுவலர்களை வகுப்பு II க்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில்

அல்லது

(ஆ) விதிக்கப்பட்ட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த பின் சேவையின் வகுப்பு III இலுள்ள உத்தியோகத்தர்கள் வகுப்பு II க்கு பதவி உயர்வு மூலம் நியமிக்கப்படுவர்.